# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 06.07. 2021 | **1)** மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறையின் கடிதம் எண். N-11025/38/20200-LSC நாள் 05.04.2021 மற்றும் தலைவர் & நிர்வாக இயக்குநர் TUFIDCO சென்னை அவர்களின் கடிதம் எண். TUFIDCO/ Nirhya Fund 915/AM(B)/2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் (AMRUTCITIES) தூத்துக்குடி மாநகரில் Dark Spot உள்ள இடங்களில் மகளிரின் பாதுகாப்பு நலன் கருதி மின் விளக்குகள் அமைத்திட Nirhya Fund ன் கீழ் (Got 60 / GOT 40 ) நிதி ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மாநகரின் வார்டு எண். 9 14, 15, 16, 19, 20, 25 மற்றும் 54 ஆகிய பகுதிகளில் இருள் சூழ்ந்துள்ள இடங்களில் புதிய மின் கம்பங்களுடன் LED மின் விளக்குகள் அமைக்கும் பணியினை அரசின் நிதியின் கீழ் செயல்படுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்,1730/2021/E1 | 49)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தீவிரமாக பரவி வருகிறது. அதனை தடுக்கும் பொருட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனைத்து விதமான தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு தொற்று ஏற்படுதல் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களுக்கு விடுமுறையில் செல்லும் போது பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி கோவிட் 19 கொரோனா தொற்று ஏற்பட்ட வீடுகளுக்கு சென்று கண்காணித்தல் போன்ற களப்பணிகளை மேற்கொள்ளவும், மருத்துவ பணிகளில் உதவி புரிய தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் (2 ஆயுள் மருத்துவர்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.<br>நிர்வாக நலன் கருதி கொரோனா தடுப்பு பணிகள் எவ்வித தடையுமின்றி நடைபெற ஏதுவாக மருத்துவ பணிகளில் உதவி புரிய தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் (2 ஆயுஸ் மருத்துவர்) 19.05.2021 முதல் 31.07.2021 வரை மூன்று மாதம் நியமனம் செய்து | 50) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கொள்வதற்கும் அதற்கான ஊதியம் (மாதம் 30,000/—) கோவிட் நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) 19.05.2021 முதல் 31.07.2021 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 1,80,000/— க்கு கோவிட் நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி 19.05.2021 முதல் ஆணையரின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். எச்1/2021/2021 | |

ஆணையர்(ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 06.07.2021